## 54

# “நான் பார்வையற்றவனாக இருந்தேன், ஆனால் இப்போது பார்க்கின்றேன்”

## யோவா. 9, ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*யோவான் 9ல் நாம், சுவிசேஷ விவரங்களில் மிகவும் விளக்கமாக உள்ள [தனிநபரின்] பண்பு பற்றிய படிப்புகளில் ஒன்றைக் கொண்டுள்ளோம்: இயேசுவால் குணமாக்கப்பட்ட, பிறவியிலேயே பார்வையற்று இருந்த ஒரு மனிதர். இந்த அற்புதம், யோவான் எழுதிய ஏழு “அடையாளங்களில்” ஆறாவதாக உள்ளது. இந்த ஏழில் ஒவ்வொன்றுமே விசேஷித்ததாக இருக்கிறது. இவை ஒவ்வொன்றுமே, இயேசுவின் தெய்வீகத்துவத்தைச் சிறப்புறக் குறிப்பிடுவதால் இவற்றை யோவான், “அடையாளங்கள்” என்று அழைத்தார் (யோவா. 20:30, 31). அத்துடன் கூடுதலாக, குறிப்பிட்ட சில சத்தியங்களையும் இவைகள் விவரிக்கின்றன. இதுவே இந்த அற்புத நிகழ்ச்சி பற்றிய விஷயமாகவும் உள்ளது. இந்த விவரமானது கிறிஸ்து, “உலகின் ஒளியாக” இருத்தலைப் பற்றிய (யோவா. 9:5) ஒரு உயிர்த்துடிப்புள்ள உவமையாக நினைக்கப்படலாம்.*

*இந்த வரலாற்றை நாம் படிக்கையில், ஒரு பிச்சைக்காரர் - உடல் ரீதியாகவும் ஆவிக்குரிய வகையிலும் - பார்வையற்ற தன்மையில் இருந்து பார்வையடைந்த தன்மைக்குச் சென்றது எவ்வாறு என்று நாம் காண்போம். நாம் இருளில் இருந்து ஒளிக்குச் செல்லுவது எவ்வாறு என்றும் நாம் கற்றுக் கொள்வோம்.*

### பார்வையற்ற ஒரு மனிதர் (வ. 1-38)

இந்த அதிகாரம், “அவர் அப்புறம் போகையில்[1] பிறவிக்குருடனாகிய ஒரு மனுஷனைக் கண்டார்” என்று தொடங்குகிறது (வ. 1). இம்மனிதர் பிச்சைக்காரராக இருந்தார் என்று வசனம் 8 குறிப்பிடுகிறது. பார்வையற்றவர்களாக இருந்தவர்களில் பெரும்பான்மையானவர்களுக்குப் பிச்சை யெடுத்தல் என்ற ஒரு தொழில்தான் கிடைத்திருந்தது (மாற். 10:46ஐக் காணவும்).

***தீர்க்கப்பட வேண்டியிருந்த ஒரு புதிர் (வ. 2-4)***

*அப்போஸ்தலர்கள் அந்த மனிதரைப் பார்த்தபோது, தீர்க்கப்பட வேண்டியிருந்த ஒரு புதிர் என்று அவர்கள் அம்மனிதரை உய்த்துணர்ந் தார்கள். அவர்கள் தங்கள் இளமைப் பருவத்தில் இருந்தே, "பாவமின்றி மரணம் இல்லை, மீறுதல் இன்றி உபத்திரவமும் இல்லை" என்று கற்றறிந்த போதகர்கள் அறிவித்ததைக் கேட்டிருந்தார்கள்.[2] இருப்பினும் இந்த நபரைப் பற்றிய விஷயமானது குழப்பமடையச் செய்வதாக இருந்தது, ஏனென்றால் இந்த மனிதர் பிறவிலேயே பார்வையற்றவராக இருந்தார். இவ்விதமாக அவர்கள், "ரபீ,[3] இவன் குருடனாய்ப் பிறந்தது யார் செய்த பாவம், இவன் செய்த பாவமோ? இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமோ?" என்று கேட்டார்கள் (வ. 2). இம்மனிதர் பிறவியிலேயே பார்வையற்று இருந்தார் என்று அவர்கள் எப்படி அறிந்தார்கள்? ஒருவேளை இயேசு அவர்களுக்குக் கூறியிருக்கலாம். ஒருவேளை இயேசு இம்மனிதரி டம் பேசிக் கொண்டிருந்ததை அவர்கள் கேட்டிருக்கலாம். ஒருவேளை அருகில் இருந்தவர்கள் யாரேனும் கூறியிருக்கலாம்.*

*அவர்களின் கேள்வியில் ஒரு பகுதி மதியீனமானதாக இருந்தது: இம்மனிதர் பாவம் செய்திருந்ததால் பார்வையற்றுப் பிறந்தாரா? இவர் பிறப்பதற்கு முன்பு எப்படிப் பாவம் செய்திருக்க முடியும்?[4] அவர்களுடைய கேள்வியின் இரண்டாம் பாகம் தீர்ப்பிடுதலாக இருந்தது: இம்மனிதர் தமது பெற்றோர் செய்திருந்த பாவத்தினால் பார்வையற்றவராகப் பிறந்திருந் தாரா? சில பாவங்கள் இன்னும் பிறந்திராத பிண்டத்தை [கருவில் உள்ள குழந்தையை] பாதிக்கக் கூடும்,[5] ஆனால் இம்மனிதரின் பெற்றோர் அந்தப் பாவங்களில் ஈடுபட்டிருந்தார்கள் என்பதை யூகிப்பதற்குச் சீஷர்கள் அடிப்படைக் காரணம் எதையும் கொண்டிருந்ததில்லை.*

*கிறிஸ்து, "அது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல"[6] (வ. 3அ) என்று பதில் அளித்தார். பாவம் என்பது எப்போதுமே துன்புறுதலில் முடிகிறது, ஆனால் எல்லாத் துன்புறுதல்களும் பாவத்தின் விளைவாகவே இருப்பதில்லை.[7] தொடர்ந்து இயேசு, "தேவனு டைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான்" என்று கூறினார் (வ. 3ஆ). இது, தேவன் இம்மனிதரைப் பார்வை யற்றவராகப் பிறக்கக் காரணராகி அதன் மூலம் தமது குமாரன் பிற்பாடு வந்து ஒரு அற்புதத்தை நிகழ்த்தச் செய்தார் என்று அர்த்தப்படுவதில்லை. மாறாக, ஒவ்வொரு கடினமான சூழ்நிலையும், பொதியப்பட்ட வாய்ப்புக் களைக் கொண்டுள்ளது என்றே வலியுறுத்தினார்: தேவனுடைய கிருபை யையும் இரக்கத்தையும் வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள், பிறருக்கு உதவுவதற்கான வாய்ப்புக்கள், விசுவாசத்தின் பெலத்தைச் செயல்விளக்கப் படுத்துவதற்கான வாய்ப்புக்கள், பிதாவினிடத்தில் கிட்டிச் சேருவதற்கான வாய்ப்புக்கள்.[8] நமது வழியில் சிரமங்கள் வரும்போது, சிலவேளைகளில் நாம், "இது வருவதற்கேற்றபடி நான் செய்தது என்ன?" என்று கேட்கின் றோம். "ஒன்றுமில்லை" என்பது பதிலாக இருக்கலாம். "தேவனுடைய வல்லமை காட்சிப்படுத்தப்படும்படிக்கு நான் இந்த சூழ்நிலையை எவ்வாறு பயன்படுத்த முடியும்?" என்பதே நாம் கேட்க வேண்டிய கேள்வியாக*

உள்ளது.

மேலும் இயேசு, "பகற்காலமிருக்குமட்டும் நான் என்னை அனுப்பின வருடைய கிரியைகளைச் செய்ய வேண்டும்; ஒருவனும் கிரியை செய்யக் கூடாத இராக்காலம் வருகிறது" என்றும் கூறினார் (வ. 4). சீஷர்கள் இந்தப் பிச்சைக்காரரை, தேவனுடைய கிரியைகளைச் செய்வதற்கான ஒரு அவசரமான வாய்ப்பாக காண வேண்டியது அவசியமாயிருந்தது. இயேசு வுக்கு, மரணத்தின் "இரவு" துரிதமாக நெருங்கிக் கொண்டிருந்தது, அது நம் ஒவ்வொருவருக்கும் அருகாமையில் நெருங்கிக் கொண்டிருக்கிறது.[9] நம்மால் முடிகின்றபோதே நாம் உழைக்க வேண்டும்.

### குணப்படுத்தப்பட வேண்டிய ஒரு நபர் (வ. 5-7, 14)

கிறிஸ்து, "நான் உலகத்திலிருக்கையில் உலகத்திற்கு ஒளியாயிருக்கி றேன்" என்று கூறினார் (வ. 5). வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், "நான் இந்த உலகத்தில் இருக்கத் தொடர்ந்திருக்கும் வரையில் - பார்வை யற்ற இந்தப் பிச்சைக்காரர் உட்பட - மனிதர்களுக்கு ஒளியைக் கொண்டு வருவதற்கான எந்த வாய்ப்பையும் புறக்கணிக்க மாட்டேன்" என்று அவர் கூறினார். அப்போஸ்தலர்கள் இந்த மனிதரை, தீர்க்கப்பட வேண்டிய இறையியல் புதிராகக் கண்டார்கள், ஆனால் கர்த்தரோ இம்மனிதரை, தொந்தரவில் இருந்த, உதவி செய்யப்பட வேண்டிய மனிதராகக் கண்டார். சற்றே முன்பு இயேசு, "நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளில் நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான்" என்று கூறியிருந்தார் (8:12). இப்போது அவர் அந்தக்கூற்றை உறுதிப் படுத்துவதற்கு செயல்பட்டார்.

"... அவர் தரையிலே துப்பி, உமிழ்நீரினால் சேறுண்டாக்கி, அந்தச் சேற்றைக் குருடனுடைய கண்களின்மேல் பூசி" (வ. 6). கிறிஸ்து இந்தச் செயல்முறையைப் பயன்படுத்தியது ஏன் என்பது பற்றி விளக்கவுரை யாளர்கள் யூகங்கள் செய்கின்றார்கள், ஆனால் உண்மையான காரணத்தை நாம் அறிவதில்லை.[10] "அவர் அதை விரும்பிய காரணத்தினால் அவ்வாறு செய்தார்" என்பதே மிகச் சிறந்த பதிலாக இருக்கும்.

கண்களில் சேற்றுடன் இருந்த இம்மனிதரிடத்தில் இயேசு, "நீ போய் ஸீலோவாம் குளத்திலே கழுவு" என்று கூறினார் (வ. 7அ).[11] நாம் கூடாரங் களின் பண்டிகையைப் பற்றிப் படித்தபோது, தண்ணீர்ச் சடங்கிற்காக, சீலோவாம் குளத்தில் இருந்து தண்ணீர் வந்தது என்று அறிந்தோம்.[12] நகரத்தின் தென்கிழக்குப் பகுதியில் அமைந்திருந்த அந்தக் குளமானது,[13] எருசலேமின் நில அடையாளங்களில் ஒன்றாக இருந்தது. இது பழங்கால உலகத்தின் மாபெரும் பொறியியல் சாதனைகளில் ஒன்றின் விளைவாக இருந்தது: எசேக்கியா அரசர், நகரத்தின் மதில்களுக்கு வெளியே இருந்த ஒரு ஊற்றிலிருந்து தண்ணீரைக் கொண்டு வருவதற்காகத் திடமான பாறை யினூடே ஒரு தண்ணீர்க் குகையைக் கட்டியிருந்தார் (2 நாளா. 32:2-4; ஏசா. 22:9-11; 2 இரா. 20:20). தண்ணீர் ஒரு குகையின் வழியே அனுப்பப் பட்டதால், அந்தக் குளம், "அனுப்பப்பட்டவன்" என்று அழைக்கப்பட்டது (யோவா. 9:7ஆ).

இப்போது நாம் நமது கவனத்தைப் பார்வையற்ற இம்மனிதரை நோக்கித் திருப்ப வேண்டிய வேளையாயிற்று; இவ்வரலாற்றின் எஞ்சியுள்ள பகுதியில் பெரும்பான்மையும் இம்மனிதரை மையங்கொண்டு இருக்கிறது. உங்களை அவரது இடத்தில் வைத்துப் பாருங்கள். அப்போஸ்தலர்கள், இம்மனிதர் அவ்விடத்தில் இருந்தும், இவர் இல்லாததுபோல் கலந்துரையாடியதை இவர் எவ்வாறு நினைத்திருப்பார் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? இயேசு பேசியதைக் கேட்கையில், தமது கண்களில் சேறு வைத்து அழுத்தப்படுவதை உணருகையில், "நீ போய், ஸீலோவாம் குளத்திலே கழுவு" என்ற வார்த்தைகளைக் கேட்கையில் இம்மனிதரின் உணர்வுகளைப் பற்றி நினைத்துப் பாருங்கள். இவருக்கு, "நீ போய்க் கழுவு … குணமடைவாய்" என்று வாக்களிக்கப்படவில்லை. "நீ போய்க் கழுவு" என்று மட்டுமே அவருக்குக் கூறப்பட்டது. அந்த வினோதமான கட்டளைக்கு நீங்கள் எவ்வாறு பதில்செயல் செய்திருப்பீர்கள்? அந்தப் பிச்சைக்காரர் எவ்வாறு பதில்செயல் செய்தார் என்பது இங்குள்ளது: "அப்படியே அவன் போய்க் கழுவி, பார்வையடைந்தவனாய்த் திரும்பி வந்தான்" (வ. 7இ).

பார்வையற்ற அந்த மனிதர் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்தது ஏன்? இம்மனிதர் தமது கண்களில் இருந்த சேற்றைக் கழுவுவதற்கு எங்காவது செல்ல வேண்டும் என்று விரும்பியது ஏன் என்பதை நான் புரிந்துகொள்ள முடிகிறது, ஆனால் இவர் சீலோவாம் குளத்திற்குச் செல்ல வேண்டியது ஏன்? இவர் அந்தக் குளத்திலிருந்து சற்று தூரத்தில் இருந்தார் என்று நியாயமான முறையில் நாம் உறுதியாயிருக்க முடியும்.[14] இம்மனிதரால் பார்க்க இயலாது என்பதை மறந்து விடாதீர்கள். அவரைப் பொறுத்தமட்டில் ஒரு சில கெஜங்கள் தூரம் கடந்து செல்லுதல் என்பது, நம்மில் பெரும்பாலானவர்கள் ஒரு சில மைல்கள் தூரம் நடப்பதைக் காட்டிலும் பெரிய அறைகூவலாக இருந்தது. எருசலேமின் கும்பல் நிறைந்த, குறுகலான தெருக்களின் வழியே இவர் மெதுவாக நகர்ந்து கொண்டிருந்ததை உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா? அந்தப் பயணம் எவ்வளவு கடினமானதாக இருந்திருக்க வேண்டும், மற்றும் அதற்கு எவ்வளவு நேரம் தேவைப்பட்டிருக்க வேண்டும்! மறுபடியும் நான் கேட்கிறேன், "இயேசு சொன்னதை அவன் ஏன் செய்தான்?"

பிற்பாடு இவர் தமது அயலகத்தார்களிடம், "இயேசு என்னப்பட்ட ஒருவர் சேறுண்டாக்கி, என் கண்களின்மேல் பூசி, 'நீ போய் ஸீலோவாம் குளத்திலே கழுவு' என்றார், அப்படியே நான் போய்க் கழுவி, பார்வையடைந்தேன்" என்று கூறினார் (வ. 11). ஒருவேளை இவர் இயேசுவைப் பற்றியும் அவர் நிகழ்த்தியிருந்த அற்புதங்கள் பற்றியும் மக்கள் பேசியதைக் கேட்டிருந்து இருக்கலாம் (7:31ஐக் காணவும்). உண்மையிலேயே இயேசு யார் என்பது பற்றிய அவரது புரிந்துகொள்ளுதல், எல்லைக்குட்பட்டதாக இருந்தது (9:17, 36ஐக் காணவும்). இருந்தபோதிலும், கிறிஸ்து "நீ போய் கழுவு" என்று கூறிய வகை முறையில் இருந்த ஏதோ ஒன்று, பார்வையற்ற மனிதர் "இதை நான் செய்ய வேண்டும்" என்று முடிவெடுக்கக் காரணமாயிற்று!

இவ்விதமாக, "அப்படியே அவன் போய்க் கழுவி, பார்வையடைந்

*தவனாய்த் திரும்பி வந்தான்" (வ. 7இ). "பார்வையடைந்தவனாய்த் திரும்பி வந்தான்" என்ற வார்த்தைகளில் என்ன ஒரு ஆச்சரியமான அடக்கத்தன்மை காணப்படுகிறது! தன் வாழ்க்கையிலேயே இதற்கு முன்பாக என்றைக்குமே பார்த்திராத ஒரு மனிதன் இங்கே இருந்தான். அவன் வண்ணங்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறான், விளக்கங்களுக்குச் செவிகொடுத்திருக் கின்றான், மற்றும் அவன் வடிவங்களை தடவி உணர்ந்திருக்கின்றான். இருந்தாலும், உண்மையிலேயே எதுவும் எப்படி காணப்பட்டது என்பதை அவன் அறிந்திருந்ததில்லை.*

*இந்தக் காட்சியை உங்கள் மனதில் சித்தரித்துப் பாருங்கள். இவர் சீலோவாம் குளத்திற்குத் தடுமாறி சென்றார். தண்ணீரை அடைந்த இவர், தமது கைகளில் தண்ணீரை முகந்து, தமது முகத்தில் இருந்த உலர்ந்த சேற்றைக் கழுவினார். பின்பு இவர் தமது கண்களைத் திறந்தபோது, இவரால் பார்க்க முடிந்தது! இவரால் தண்ணீரைப் பார்க்க முடிந்தது; இவரால் தமது கைகளை பார்க்க முடிந்தது! இவர் தமது தலையை உயர்த்தினார்; அலைபாய்ந்து கொண்டிருந்த கூட்டத்தை இவரால் பார்க்க முடிந்தது! இவர் மேலே கண்ணோக்கியபோது, இவரால் ஆகாயத்தைப் பார்க்க முடிந்தது; இவரால் பறவைகளைப் பார்க்க முடிந்தது! இவரது திகைப்பை, இவரது உணர்வெழுச்சியைக் கற்பனை செய்து பாருங்கள்! இந்த எல்லா ஆசீர்வாதங்களும் மற்றும் அதிகமானவைகளும் "பார்வை அடைந்தவனாய்த் திரும்பி வந்தான்" என்ற நான்கு வார்த்தைகளில் குறைவாய் சொல்லப்பட்டுள்ளன![15]*

*வசனம் 14ன்படி, "இயேசு சேறுண்டாக்கி, அவன் கண்களைத் திறந்த நாள் ஓய்வுநாளாயிருந்தது." இவ்வரலாறு விரித்துரைக்கப்படுகையில், அதை நினைவுகூருங்கள். இயேசு ஓய்வுநாளன்று இன்னொரு நபரைக் குணமாக்கி யிருந்தார்! தொந்தரவான சூழ்நிலை உண்டாகிக் கொண்டிருந்தது!*

***தீர்த்து வைக்கப்பட வேண்டிய ஒரு பிரச்சனை (வ. 8-14)***

*இந்த மனிதர் தாம் பார்க்க முடிந்தவராக ஆனபின்பு எங்கே செல்ல வேண்டியிருந்தது? இயேசு எங்கிருந்தார் என்பதைப் பற்றி இவர், கருத்து எதுவும் கொண்டிருந்ததில்லை (வ. 1, 12), மற்றும் இவர், தாம் பிச்சை எடுத்துக் கொண்டிருந்த இடத்திற்குத் திரும்பிச் செல்லுதல் என்பது ஏற்புடையதாக இராது, எனவே இவர் இல்லம் சென்றார்.*

*இவரது அயலகத்தார்கள் இவரைக் கண்டபோது, அவர்கள் அது இவர் தான் என்று நிச்சயங்கொண்டிருக்கவில்லை. இவரைப் போலக் காணப் பட்டார், ஆனால் இவர் பார்வையற்றவர்களின் எச்சரிக்கையான நடைவைப்புடன் நடக்கவில்லை. இவரது கண்கள் திறந்திருந்தன மற்றும் கவனம் செலுத்திக் குவிந்திருந்தன. ஒவ்வொரு புதிய காட்சியும் இவரது கவனத்தைக் கவர்ந்தபோது, இவரது தலையானது இப்புறமும் அப்புறமு மாகத் திரும்பிற்று. கடந்த காலத்தில் இவரை அறிந்திருந்தவர்கள் வாக்கு வாதம் செய்தார்கள்: "சிலர், 'அவன்தான்' என்றார்கள். வேறு சிலர்: 'அவனு டைய சாயலாயிருக்கிறான்' என்றார்கள்" (வ. 9அ). அவர்கள் வாக்குவாதம் செய்து கொண்டிருக்கையில், இம்மனிதர் "நான்தான் அவன்" என்று*

*தொடர்ந்து கூறிக்கொண்டிருந்தார் (வ. 9ஆ). கேள்விகளுக்கு இவர் பதில் அளித்து தமது வரலாற்றை மீண்டும் கூறுகையில், இவர் அநேகமாகப் புன்னகை செய்திருக்க வேண்டும்.*

> *அப்பொழுது அவர்கள் அவனை நோக்கி: "உன் கண்கள் எப்படித் திறக்கப்பட்டது" என்றார்கள். அவன் பிரதியுத்தரமாக: "இயேசு என்னப்பட்ட ஒருவர் சேறுண்டாக்கி, என் கண்களின்மேல் பூசி, 'நீ போய் ஸீலோவாம் குளத்திலே கழுவு' என்றார். அப்படியே நான் போய்க் கழுவி, பார்வையடைந்தேன்" என்றான். அப்பொழுது அவர்கள்: "அவர் எங்கே?" என்றார்கள். அவன்: "எனக்குத் தெரியாது" என்றான் (வ. 10-12).*

*சீஷர்கள் இந்த மனிதரை தீர்த்துவைக்கப்பட வேண்டிய ஒரு புதிராகக் கண்டார்கள்; இப்பொழுது அயலகத்தார் இவரை, தீர்த்து வைக்கப்பட வேண்டிய ஒரு பிரச்சனையாகக் கண்டார்கள். அற்புதத்தின் உண்மைத் தன்மை அவர்களைக் குழப்பம் அடையச் செய்தது, குணப்படுத்துதலில் இயேசுவுக்கு மதிப்பு அளிக்கப்பட்டது அவர்களைக் குழப்பம் அடையச் செய்தது (வ. 16, 22ஐக் காணவும்), மற்றும் ஓய்வுநாளில் அற்புதம் நடந்திருந் தது என்ற உண்மையானது (வ. 14) அவர்களைத் தொந்தரவு செய்தது. இப்படிப்பட்ட விஷயங்களை அவர்களை சிக்கு எடுக்க இயலாதவர்களாய் இருந்தார்கள். ஆகையால், அவர்கள் இம்மனிதரை, எல்லா பதில்களையும் தங்களிடம் கொண்டுள்ளதாக உரிமை கோரியவர்களான, எருசலேமில் இருந்த மதத்தலைவர்களிடம் இழுத்துச் சென்றார்கள் (வ. 13).[16]*

### *தள்ளப்பட வேண்டிய ஒரு இக்கட்டான நிலை*
### *(வ. 15-17, 22)*

*என்ன நடைபெற்றது என்று பரிசேயர்கள் இம்மனிதரைக் கேட்டார் கள், இவர் தமது வரலாற்றை மீண்டும் கூறினார் (வ. 15). இந்தச் செயல்பாடு களின்போது, இயேசு என்ற பெயர் ஒருபோதும் பயன்படுத்தப்படவில்லை, ஆனால் இம்மனிதர் யாரைச் சந்தித்திருந்தார் என்பதை அதிகாரிகள் மிகச் சரியாக அறிந்திருந்தார்கள் (வ. 22). இவரைக் குணமாக்கிய ஒருவர் யார் என்பதைப் பற்றி அவர்கள் கேள்விப்பட்டபோது, அவர்கள் "அந்த மனிதன்[17] ஓய்வுநாளைக் கைக்கொள்ளாததினால் அவன் தேவனிடத் திலிருந்த வந்தவனல்ல" என்று பற்கடிப்புடன் கூறினார்கள் (வ. 16அ).*

*இதற்கு முன்பே இயேசு ஒரு ஓய்வுநாளில் [யாரோ ஒருவரை] குணமாக்கியிருந்தபடியால் எருசலேம் தலைவர்களால் எதிர்த்து நிற்கப் பட்டிருந்தார் (யோவா. 5:1, 9, 10, 16, 18; 7:21-23). இந்த வேளையில் அவர் குணமாக்கியிருந்ததோடு மட்டுமின்றி, சேறுண்டாக்கக் கூடிய துடுக்குத் தனத்தையும் செய்திருந்தார்.[18] அவர்களின் பாரம்பரியங்களின்படி, இயேசு ஓய்வுநாளில் ஒருமுறையல்ல, பலமுறைகள் வேலை செய்திருந்தார்!*

*கிறிஸ்துவைப் பற்றி அதிகாரிகள் தர்க்கித்ததை ஒரு முக்கூற்றியலாகக் குறைக்க முடியும்:[19]*

- *பிரதானக் கூற்று: "ஓய்வுநாள் பற்றிய நமது பாரம்பரியங்களை*

மீறுகிற எவரும் பாவியாக இருக்கின்றார்."

- துணைக்கூற்று: "இயேசு, ஓய்வுநாள் பற்றிய நமது பாரம்பரியங்களை மீறியிருக்கின்றார்."
- முடிவு: "ஆகையால், இயேசு ஒரு பாவியாயிருக்கின்றார்."

முக்கூற்றியல்களில், பிரதான மற்றும் துணைக்கூற்றுகள் உண்மையாக இருந்தால், முடிவும் உண்மையானதாக இருக்க வேண்டும். [இவ்விடத்தில்] பிரதான கூற்று உண்மையாயிருக்கவில்லை என்பதே பரிசேயர்களின் முக்கூற்றியலின் பிரச்சனையாக இருந்தது. அவர்களின் பாரம்பரியங்கள் தேவனிடத்திலிருந்து அல்ல, ஆனால் மனிதர்களிடத்திலிருந்தே தோன்றின என்பதால் அது உண்மையற்றதாக இருந்தது (மத். 15:1-9ஐக் காணவும்).

வசனம் 16ன் முடிவுப் பகுதியானது, பரிசேயர்கள் தங்கள் குறுக்கு விசாரணையை நடத்திக் கொண்டிருக்கையில் காட்சிகளுக்குப் பின்னால் ஒரு குறிப்பைத் தருகிறது: "வேறு சிலர் [அதாவது மத அதிகாரிகளின் மத்தியிலிருந்த மற்ற சிலர்]: 'பாவியாயிருக்கிற மனுஷன் இப்படிப்பட்ட அற்புதங்களை எப்படிச் செய்வான்?' என்றார்கள்" (வ. 16ஆ).[20] அவர்கள் தங்களின் முக்கூற்றியல் தவறானது என்று புரிந்துகொண்டிருக்கவில்லை, ஆனால் முடிவு என்பது சரியானதாகத் தோன்றவில்லை என்பதை ஒரு சிலர் அறிந்து இருந்தார்கள். இவ்விதமாய், "அவர்களுக்குள்ளே பிரிவினை யுண்டாயிற்று" (வ. 16இ). சட்டப்படி, பிரிவினை என்பது விரும்பத் தகாததாக இருந்தது (1 கொரி. 1:10), ஆனால் இந்த வேளையில், இது நல்லதாக இருந்தது. கிறிஸ்துவின் ஊழியமானது ஆலோசனைச் சங்கத்தில் இருந்த, கடின இருதயங்கொண்ட மற்றும் கடினமான தலைகளையுடைய சிலரின்மீது கூடச் செயல்தாக்கத்தைச் செலுத்தியிருந்தது![21]

இருப்பினும், பெரும்பான்மையானவர்கள் மனப்பதிவற்றவர்களாக இருந்தனர். அவர்கள், குணமாக்கப்பட்டிருந்த மனிதரைத் தொடர்ந்து கேள்வி கேட்டார்கள்: "உன் கண்களைத் திறந்தானே, அவனைக் குறித்து நீ என்ன சொல்லுகிறாய்?" (வ. 17அ). இவர் அதற்கு, "அவர் தீர்க்கதரிசி"[22] என்று பதில் அளித்தார் (வ. 17ஆ). இவர் இன்னமும் இயேசு யார் என்பதை நிச்சயமாக அறியாதிருந்தார்; ஆனால் அவர் அற்புதங்களைச் செய்யக் கூடியவராக இருந்தபடியால், அவர் குறைந்தபட்சம் ஒரு தீர்க்கதரிசியாக இருக்க வேண்டும் என்று இம்மனிதர் புரிந்து உணர்ந்து கொண்டார்.[23]

### தவிர்க்கப்பட வேண்டிய ஒரு பிடிகுழி (வ. 18-23)

இம்மனிதர் குணமாக்கப்பட்டது பற்றிப் பொய்யுரைக்கலாம் என்று கேள்வி கேட்டவர்களில் சிலர் நினைத்தார்கள்,[24] எனவே அவர்கள் இம்மனிதரின் பெற்றோரை வரவழைத்தார்கள் (வ. 18). இம்மனிதரின் தந்தையும் தாயும், நாட்டில் இருந்த மிகவும் அதிகாரம் நிறைந்த குழுவினருக்கு முன்பாக, நடுக்கத்துடன் வந்தார்கள் (வ. 22). அவர்களிடத்தில் ஆலோசனைச் சங்கத்தார் மூன்று கேள்விகளைக் கேட்டார்கள்: (1) "இவன்[25] உங்கள் மகன்தானா?"; (2) "இவன் பார்வையின்றிப் பிறந்தானா?"; (3) "இவன் எவ்வாறு பார்வையடைந்தான்?" (வ. 19).

*முதல் இரு கேள்விகளுக்குப் பெற்றோர்கள் ஆம், அப்படித்தான் என்று பதில் கொடுத்தார்கள். மூன்றாவது கேள்விக்குப் பதிலளிக்க மறுத்து விட்டார்கள், "... யூதர்களுக்குப் பயந்ததினால் இப்படிச் சொன்னார்கள். ஏனெனில் இயேசுவைக் கிறிஸ்து என்று எவனாவது அறிக்கை பண்ணினால் அவனை ஜெப ஆலயத்துக்குப் புறம்பாக்க வேண்டுமென்று யூதர்கள் அதற்கு முன்னமே கட்டுப்பாடு செய்திருந்தார்கள்" (வ. 22). "ஜெப ஆலயத்துக்குப் புறம்பாக்குதல்"[26] என்பது சமுதாய ரீதியான, அரசியல் ரீதியான மற்றும் பொருளாதார ரீதியான அத்துடன் மதரீதியான கடுமையான விளைவு களைக் கொண்டிருந்தது. ஜெப ஆலயத்துக்குப் புறம்பாக்கப்பட்ட எவரொருவரும் எல்லா நடைமுறை நோக்கங்களுக்காகவும் யூத இனத்தி லிருந்து துண்டிக்கப்படுவார்கள்.[27] விலக்கி வைத்து விடுவதாகப் பயமுறுத்து தல் என்பது யூத அதிகார உயர்வர்க்கக் கரங்களின் வலிமை வாய்ந்த ஆயுதமாக இருந்தது.*

*குணமாக்கப்பட்ட மனிதருடன் சேர்ந்து யாரேனும் ஒருவர் அகம் மகிழ்ந்திருக்கலாம் என்று நாம் எதிர்பார்க்கலாம், ஆனால் எவரொவரும் அவ்வாறு செய்யவில்லை என்பது உறுதியாயிற்று. அயலகத்தார்கள் இம்மனிதரை, தீர்த்துவைக்கப்பட வேண்டிய ஒரு பிரச்சனையாக நினைத்திருந்தார்கள். இவரது பெற்றோர்கள் இவரை, தவிர்க்கப்பட வேண்டிய ஒரு பிடி குழியாக இப்போது கண்ணோக்கினார்கள். கேள்வி எண் 3ஐ - இம்மனிதர் எவ்வாறு தமது பார்வையைப் பெற்றார் என்ற கேள்வியை - பொறுத்தமட்டில் அவர்கள், "... இவன் பார்வையடைந்த வகை எங்களுக்குத் தெரியாது; இவன் கண்களைத் திறந்தவன் இன்னான் என்பதும் எங்களுக்குத் தெரியாது; இவன் வயதுள்ளவனாயிருக்கிறான்,[28] இவனைக் கேளுங்கள், இவனே சொல்லுவான்" என்று பதில் அளித்தார்கள் (வ. 21).*

***நசுக்கப்பட வேண்டிய ஒரு பூச்சி (வ. 24-34)***

*பெற்றோர்களிடமிருந்து திருப்தியான பதிலைப் பெறாத பரிசேயர்கள், அவர்களின் மகன்மீது தங்கள் தாக்குதலைப் புதுப்பித்தார்கள். "ஆதலால், அவர்கள் குருடனாயிருந்த மனுஷனை இரண்டாந்தரம் அழைத்து" (வ. 24அ). காண்பதற்கு ஒரு எதிர்மறைப் பக்கம் இருந்தது என்று இந்தப் பிச்சைக்காரர் கண்டுபிடித்தார். இவர் வெறுப்புணர்வைக் கேள்விப்பட்டு இருந்தார்; இப்போது இவர் முதன்முறையாக அதைக் கண்ணுற்றார்: கோபம் கொப்பளிக்கும் கண்கள், பற்கடிப்பினால் கோணிய உதடுகள், அவிசுவாசத்தினால் சுருங்கிய புருவங்கள்.*

*அவர்கள் இம்மனிதரிடத்தில், "நீ தேவனை மகிமைப்படுத்து; இந்த மனு ஷன் பாவியென்று நாங்கள் அறிந்திருக்கிறோம்" என்றார்கள் (வ. 24ஆ). "தேவனை மகிமைப்படுத்து" என்ற கட்டளையானது "இயேசுவுக்குப் பதிலாகத் தேவனை மகிமைப்படுத்து" என்று அர்த்தப்படக்கூடும், ஆனால் இந்தச் சொற்றொடரானது அநேகமாக, சத்தியத்தைக் கூறும்படிக்கு ஒரு வாக்குறுதியைச் செயல்படுத்துவதாக இருந்திருக்கலாம் (யோசு. 7:19ஐக் காணவும்). "உண்மையில் நடந்தது என்ன என்பதைக் கூறு!" என்பதே*

*மறைவான கருத்தாக இருந்தது.*

*தொடர்ந்து வந்த கருத்துப் பரிமாற்றம் குறிப்பிடத்தக்கதாக உள்ளது. அவர்கள் இம்மனிதரை எவ்வளவாகத் தொல்லைப்படுத்தினார்களோ, அவ்வளவுக்காய் இவர் இயேசுவின்மீது கொண்டிருந்த விசுவாசம் வளர்ந்தது. பிறவியிலேயே பார்வையற்றவராயிருந்து, இவ்விதமாய்ப் பிச்சைக்காரர் ஆக வேண்டும் என்று முன் தீர்மானிக்கப்பட்டிருந்த இம்மனிதர் கொஞ்சமே படித்தவராக அல்லது படிப்பறிவே இல்லாதவராக இருந்திருக்க வேண்டும், ஆனால் கற்றறிந்தவர்களாய் இருந்த தமது எதிராளிகளை இவர் இன்னமும் வலிவாக எதிர்த்துக் கொண்டிருந்தார்.*

*இவர், "அவர் பாவியென்று எனக்குத் தெரியாது: நான் குருடனாயிருந்தேன். இப்பொழுது காண்கிறேன்; இது ஒன்றுதான் எனக்குத் தெரியும்" என்று பதில் அளித்தார் (வ. 25). அவர்கள் தொடர்ந்து இவரை கேட்டுக்கொண்டே இருந்தார்கள் (வ. 26). பெருமூச்சு விட்ட இம்மனிதர், "முன்னமே உங்களுக்குச் சொன்னேன், நீங்கள் கேளாமற்போனீர்கள்; மறுபடியும் கேட்க வேண்டியதென்ன?" என்று கூறினார் (வ. 27அ). பின்பு இவர், "அவருக்குச் சீஷராக உங்களுக்கும்[29] மனதுண்டோ?"[30] என்றும் கூடுதலாகக் கேட்டார் (வ. 27ஆ).*

*அவர்கள் கொட்டப்பட்டவர்களாக, எதிர்த்துத் திட்டினார்கள்: "நீ அவனுடைய சீஷன், நாங்கள் மோசேயினுடைய சீஷர். மோசேயுடனே தேவன் பேசினாரென்று அறிவோம், இவன் எங்கேயிருந்து வந்தவனென்று அறியோம்" என்றார்கள் (வ. 28, 29).*

*இவர், "... ஆச்சரியமான காரியம்" என்று பதில் அளித்தார் (வ. 30இ). இவரைக் குணமாக்கியிருந்தவர், உயிருடன் இருந்தவர்களிலேயே மிகவும் திகைக்க வைப்பவராக இருந்தார், இருந்தாலும் ஒவ்வொன்றையும் அறிந்திருப்பதாக உரிமைகோரியவர்கள், அவரைப் பற்றி ஒன்றும் தெரியாது என்று ஒப்புக்கொண்டார்கள் (வ. 30ஆ)!*

*இம்மனிதர், "பாவிகளுக்குத் தேவன் செவிகொடுக்கிறதில்லையென்று அறிந்திருக்கிறோம்; ஒருவன் தேவபக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவிகொடுப்பார்" என்று கூறினார் (வ. 31). தலைவர்கள் தாங்கள் மோசேயின் பின்பற்றாளர்கள் என்று உரிமைகோரியிருந்தபடியால், தேவன் பாவிகளுக்குச் செவிகொடுக்கிறதில்லை என்று வேத வசனங்கள் போதிக்கின்றன என்று இவர் அவர்களுக்கு நினைப்பூட்டினார் (1 சாமு. 8:18; யோபு 27:9; சங். 18:41; 34:15, 16; 66:18; 145:19, 20; நீதி. 1:28; 15:29; ஏசா. 1:15; 59:2; எசே. 8:18).[31]*

*தொடர்ந்து இவர், ''பிறவிக்குருடனுடைய கண்களை ஒருவன் திறந்தானென்று உலகமுண்டானது முதல் கேள்விப்பட்டதில்லையே'' என்றும் கூறினார் (வ. 32). கடந்த காலத்தில் மாபெரும் அற்புதங்கள் நிகழ்த்தப்பட்டிருந்தன, ஆனால் இயேசு இவ்வுலகிற்கு வந்த வேளை வரையிலும் எவரொருவரும் பார்வையற்ற ஒருவருக்குப் பார்வையை மீட்டுத் தந்திருக்கவில்லை.[32] நாம் அறிந்தவரையிலும், கிறிஸ்துவே கூட, பிறப்பிலேயே* [congenital[33]] *பார்வையற்ற தன்மை கொண்டிருந்த எவரையும் இதற்கு முன்பு ஒருபோதும் குணமாக்கியிருந்ததில்லை.*

இவர், "அவர் தேவனிடத்திலிருந்து வராதிருந்தால் ஒன்றும் செய்ய மாட்டாரே" என்று முடித்தார் (வ. 33). பரிசேயர்கள் இயேசுவைக் குற்றப் படுத்தும் முக்கூற்றியல் ஒன்றைக் கொண்டிருந்தார்கள்; இப்பொழுது இந்தப் பிச்சைக்காரர் அவரை மெய்ப்பித்துக் காண்பிக்கும் மதிப்புமிக்க முக்கூற்றியல் ஒன்றை அளித்தார்:

- பிரதான கூற்று: "தேவன் பாவிகளுக்குச் செவிகொடுப்பதில்லை."
- துணைக் கூற்று: "தேவன் இம்மனிதருக்கு[34] [இயேசுவுக்கு] செவி கொடுத்தார் என்பது தெளிவு."
- முடிவு: "ஆகையால், இவர் [இயேசு] பாவியல்ல!"

இவரது தர்க்கவியலுக்குத் தலைவர்களால் பதில் அளிக்க இயலாதிருந்தது, எனவே அவர்கள், வாக்குவாதம் செய்பவர்களால் பயன்படுத்தப் பட்ட பழைய ஒரு தந்திரத்தை கையாண்டார்கள்: நீங்கள் ஒரு வாக்குவாதத்திற்குப் பதில் அளிக்க முடியாதபோது, அந்த வாக்குவாதத்தை ஏற்படுத்தியவரைத் தாக்குங்கள். அவர்கள், "முழுவதும் பாவத்தில் பிறந்த நீ[35] எங்களுக்குப் போதிக்கிறாயோ?" என்று கூறினார்கள் (வ. 34).

பின்பு "அவர்கள் அவனைப் புறம்பே தள்ளிவிட்டார்கள்" (வ. 34ஆ). இது, அவர்கள் இவரைக் கதவுக்கு வெளியே தள்ளிவிட்டார்கள் என்று மட்டும் அர்த்தப்படக்கூடும், ஆனால் இது அநேகமாக, இவர் தமது பெற்றோர்கள் பயந்த - "ஜெப ஆலயத்திற்குப் புறம்பாக்குதல்" (வ. 22), அதாவது ஜனத்திலிருந்து அறுப்புண்டு போகுதல் என்ற அந்த - நடத்து தலுக்கே உட்பட்டார் என்று அர்த்தப்படுத்துவதாயிருக்கலாம்.[36] அவர் அனுபவித்த அந்த நாள் எப்படிப்பட்டதாக இருந்தது:[37] காலையில் பார்வையற்று இருந்தார், பகலில் குணமாக்கப்பட்டார், நாட்டின் உயர்நீதிமன்றத்தின் முன்பாக அழைக்கப்பட்டார், மற்றும் இரவுவரும் முன்பே தேவனுடைய வீட்டிலிருந்து தள்ளப்பட்டார்!

**இரட்சிக்கப்பட வேண்டிய ஒரு நபர் (வ. 35-38)**

ஆலோசனைச் சங்கக் கட்டிடத்தை விட்டுச் சென்றபோது, இம்மனிதர் எங்கு சென்றார்? அவர் தேவாலயத்தில் தங்க முடியாது, அவர் தாம் பிச்சையெடுத்துக் கொண்டிருந்த இடத்திற்குத் திரும்பிச் செல்ல முடியாது, அவர் தமது இல்லத்திற்கும் அயலகத்திற்கும் திரும்பிச் செல்லச் சாய மாட்டார்.[38] அவர் செல்வதற்கு ஒரு இடமற்ற மனிதரானார். இது எவ்வாறு உணரப்படக்கூடும் என்பதை உங்களில் ஒரு சிலர் அறிந்திருப்பீர்கள்.

இவர் ஒரு பொது இடத்திற்குச் சென்றார் என்பது நாம் நிச்சயமாக அறிந்த ஒன்றாக உள்ளது (வ. 35, 39, 40). இவர் எங்கு சென்றிருப்பினும், கர்த்தர் இவரைக் கண்டார்: "அவனை அவர்கள் புறம்பே தள்ளிவிட்டதை இயேசு கேள்விப்பட்டு, அவனைக் கண்டபோது: ... என்றார்" (வ. 35அ). இவ்வரலாறு முழுவதிலும், இந்தப் பிச்சைக்காரர் பற்றிய முன்செயல் பாட்டைக் கிறிஸ்து மேற்கொண்டார் - இதையே அவர் நமக்கும் செய்கின் றார் (1 யோவா. 4:10). மேலும் இந்த வரலாறு முழுவதிலும், இயேசு ஒருவரே, இவரை ஒரு நபர் என்று கண்டவராக இருந்தார். முன்னதாக

*அவர் இவரைக் குணமாக்க வேண்டிய ஒரு நபராகக் கண்டிருந்தார்; இப்போது அவர் இவரை இரட்சிக்கப்பட வேண்டிய ஒரு நபராகக் கண்டார்.*

*குணமாக்கப்பட்டிருந்தவரிடத்தில் அவர் [இயேசு], "நீ தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறாயா?" என்று கேட்டார் (வ. 35ஆ).[39] கிரேக்க வசனத்தில், "நீ" என்பது வலிவார்ந்ததாக உள்ளது: "நீ தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறாயா?"[40]*

*இவர், "ஆண்டவரே,[41] அவரிடத்தில் நான் விசுவாசமாயிருக்கும்படிக்கு அவர் யார்?" என்று பதிலுக்குக் கேட்டார் (வ. 36). முன்னதாக, இவர் இயேசுவின் குரலைக் கேட்டிருந்தார், ஆனால் இவர் அவரை பார்த்திருந்தது இல்லை. இம்மனிதர் விசுவாசிப்பதற்கு முன்தீர்மானமாயிருந்ததைக் கவனியுங்கள். விசுவாசிக்கக் கூடாது என்று தீர்மானமாய் இருப்பவரிடத்தில் உலகில் உள்ள எல்லாச் சாட்சியங்களையும் முன் வைத்தாலும் செயல் விளைவு ஒன்றுமிராது. புத்திமானின் பதிலைப் போன்றே, விசுவாசமும் மனவிருப்பத்தின் பதிலாகவே உள்ளது.*

*இவரிடத்தில் இயேசு, "நீ அவரைக் கண்டிருக்கிறாய், உன்னுடனே பேசுகிறவர் அவர்தான்" என்றார் (வ. 37). வேறுவார்த்தைகளில் சொல்லுவதென்றால் இயேசு, "நீ அவரைக் கண்டு கொண்டிருக்கின்றாய்! நானே மனுஷ [தேவனுடைய] குமாரன்!" என்று அறிவித்தார்.*

*கிறிஸ்து அதைக் கூறியபோது, எல்லாத் துண்டுகளும் அதனதன் இடத்தில் வீழ்ந்தது (எல்லாம் தெளிவாகின). இம்மனிதர், "ஆண்டவரே, விசுவாசிக்கிறேன்" என்று கூறினார் (வ. 38அ). உடல்ரீதியான பார்வையற்ற தன்மையில் இருந்து உடல்ரீதியான பார்வையுள்ள தன்மைக்குக் கடந்து செல்வதற்குக் குளத்தினருகில் இந்தப் பிச்சைக்காரருக்கு ஒரு சில வினாடிகளே தேவையாயிருந்தது. ஆவிக்குரிய இருளில் இருந்து ஆவிக்குரிய வெளிச்சத்திற்குக் கடந்து செல்ல இவருக்குப் பல மணி நேரங்கள் தேவையாயிருந்தது.*

*இம்மனிதரின் விசுவாசப் பயணம் நிறைவடைந்தது: இவர் கர்த்தரை, "இயேசு என்னப்பட்ட ஒருவர்" (வ. 11) என்று குறிப்பிட்டிருந்தார். பின்பு இவர் அவரை, "தீர்க்கதரிசி" என்று பெயர் அட்டையிட்டிருந்தார் (வ. 17), மற்றும் "தேவனிடத்திலிருந்து வந்தவர்" (வ. 33) என்றார். கடைசியில் இவர் அவரை, "ஆண்டவரே" என்று அழைத்தார் (வ. 38; அப். 2:36; 1 கொரி. 12:3ஐக் காணவும்). என்னைப் பற்றி - அல்லது மற்ற எந்த மனிதரைப் பற்றியும் - நீங்கள் அதிகமாக அறிய அறிய, நீங்கள் அதிகமான தவறுகளைக் கண்டுபிடிப்பீர்கள், நீங்கள் அதிகமாக ஏமாற்றம் அடைவீர்கள். இதற்கு மறுபுறத்தில், இயேசுவைப் பற்றி அதிகமாக அறிய அறிய, "ஆச்சரியம் அதிகமாகும்; மற்றும் அது இந்தக் காலத்திற்கு மட்டுமின்றி நித்தியத்திற்கும் உண்மையாயிருக்கும்."[42]*

*குணமாக்கப்பட்டிருந்த மனிதர் பின்பு, இயேசுவை "பணிந்து கொண்டார்" (வ. 38ஆ).[43] இது உடனடியாக ஏற்பட்ட ஒரு பதில்செயலாக இருந்தது. இந்தப் பிச்சைக்காரர் பணிந்துகொள்ளும்படி கட்டளையிடப் படவில்லை. இவர் தமது உடலுக்கும் ஆத்துமாவுக்கும் வெளிச்சத்தைக்*

*கொண்டு வந்த ஒருவரைப் பணிந்து கொள்ள விரும்பினார். தனிநபர் ஒருவர், கிறிஸ்து யார் என்றும் மற்றும் தமக்கு அவர் என்ன செய்துள்ளார் என்பதையும் புரிந்துகொள்ளுகின்றபோது, அந்த நபர் அவரை [கிறிஸ்துவை] ஆராதித்து வணங்காது இருக்க முடியாது!*

## பார்வையற்ற மனிதர்கள் (வ. 39-41)

இவ்வரலாறு இன்னும் முடிவடையவில்லை. இயேசு, விசுவாசத்திற்குள் வந்த உடல்ரீதியாகப் பார்வையற்று இருந்த பிச்சைக்காரரையும், தம்மில் விசுவாசம் கொள்ள மறுத்து ஆவிக்குரிய வகையில் பார்வையற்று இருந்த பரிசேயர்களையும் நேரெதிராக ஒப்பிட்டார். இந்த மனிதர் வெளிச்சத்தை நோக்கிப் படிப்படியாக முன்னேறியிருந்தது போலவே, கிறிஸ்துவின் விரோதிகள் இருளுக்குள் மேலும் மேலும் இழுக்கப்பட்டிருந்தார்கள்.

குணமாக்கப்பட்டிருந்த மனிதரைக் கர்த்தர் ஒரு பொது இடத்தில் கண்டிருந்தார் என்று நாம் ஏற்கனவே கருத்துத் தெரிவித்திருந்தோம். இயேசுவின் பெயர் ஏற்கனவே ஒவ்வொருவரின் வாயிலும் இருந்தது (யோவா. 7:12), மற்றும் இப்போது, புறம்பாக்கப்பட்டிருந்த இம்மனிதர் பற்றிய வார்த்தையும் பரவி இருந்தது (யோவா. 9:35). கெட்டபெயரெடுத்த இவ்விருவரும் ஓரிடத்தில் சந்தித்தபோது, அவர்கள் ஒரு கூட்டத்தின் கவனத்தைக் கவர்ந்திருக்க வேண்டும் - அக்கூட்டத்தில், கிறிஸ்துவின் உயிரைப் பறிக்கத் தேடியவர்களும், சற்று நேரத்திற்கு முன்பு இந்தப் பிச்சைக்காரரைப் புறம்பே தள்ளிவிட்டிருந்தவர்களும் உள்ளடங்கி யிருக்கலாம் (வ. 40).

கூட்டத்தை நோக்கித் திரும்பிய கிறிஸ்து, "... நியாயத்தீர்ப்புக்கு நான் இந்த உலகத்தில் வந்தேன்" என்று கூறினார் (வ. 39ஆ). பாவிகளை இரட்சித்தல் என்பதே அவர் உலகத்திற்கு வந்த காரணமாக இருந்தது (யோவா. 3:17; 12:47; லூக். 19:10ஐக் காணவும்),[44] ஆனால் நியாயந்தீர்த்தல் என்பது அவரது வருகையின் விளைவாக இருக்கும் (யோவா. 5:22; 12:48). வெளிச்சம் ஒளியூட்டுவது மட்டுமின்றி, வெளியாக்கவும் செய்கிறது.

அவர் தமது வருகைக்கான இந்தக் காரணத்தைத் தொடர்ந்து கூறினார்: "காணாதவர்கள் காணும்படியாகவும், காண்கிறவர்கள் குருடராகும் படியாகவும் நியாயத்தீர்ப்புக்கு நான் இந்த உலகத்தில் வந்தேன்" (வ. 39அ). கர்த்தர் இவ்விடத்தில் வார்த்தை விளையாட்டு ஒன்றைக் கையாண்டார், அவர் உடல்ரீதியான பார்வையற்ற தன்மையை ஆவிக்குரிய பார்வையற்ற தன்மையுடன் ஒப்பிட்டார்: உடல்ரீதியாகப் பார்வையற்றுள்ளவர்கள் காண்பதற்குக் காரணராகும்படிக்கு அவர் வந்திருந்தார். அதே வேளையில், விசேஷித்த ஆவிக்குரிய உள்ளொளி இருப்பதாக உரிமைகோரிக் கொண்ட வர்களின் ஆவிக்குரிய பார்வையற்ற தன்மையை வெளியாக்கும்படிக்கும் அவர் வந்திருந்தார்.

அதைக் கவனித்துக் கொண்டிருந்த பரிசேயர்கள், தங்களை அவர் குறிப்பிடுகின்றாரோ என்று சந்தேகப்பட்டார்கள். அவர்கள், "நாங்களும் குருடர்களோ?" என்று கேட்டார்கள் (வ. 40). வேறு வார்த்தைகளில்

சொல்லுவதென்றால், அவர்கள் "நிச்சயமாக நீர் எங்களைப் பற்றிப் பேசவில்லையே!" என்று வியப்படைந்தார்கள். அதற்கு இயேசு, "நீங்கள் குருடராயிருந்தால் உங்களுக்குப் பாவமிராது; நீங்கள் 'காண்கிறோம்' என்று சொல்லுகிறபடியால் உங்கள் பாவம் நிலைநிற்கிறது" என்று பதில் அளித்தார் (வ. 41). அவர் தமது வார்த்தை விளையாட்டைத் தொடர்ந்தார். மதத் தலைவர்களிடம் அவர் உண்மையில், "நீங்கள் உடல்ரீதியாகப் பார்வையற்ற தன்மையுடன் இருந்தால், இது தேவனுடனான உங்கள் உறவைப் பாதிக்காது; ஆனால் நீங்கள் ஆவிக்குரிய வகையில் உங்கள் பார்வையற்ற தன்மையை ஒப்புக்கொள்ள மறுக்கின்ற வரையிலும், உங்களுக்கு நம்பிக்கை என்பதே கிடையாது" என்றே கூறினார்.

உடலுக்குரிய பார்வையற்ற தன்மையின் பயங்கரமான நிலையைப் போலவே, ஆவிக்குரிய பார்வையற்ற தன்மையின் விளைவை ஒப்பிடுவதற்கு ஒன்றும் இருப்பதில்லை. தேவனால் அங்கீகரிக்கப்பட்டவரா யிருப்பதற்கு, நேர்மையான இருதயம் என்பது ஒரு நிபந்தனையாக உள்ளது (லூக். 8:15). நாம் சத்தியத்தை விரும்ப வேண்டும் (2 தெச. 2:10). நாம் வசனத்தைத் தாழ்மையுடன் அணுகவேண்டும் (யாக். 1:21). நாம் நமது முன் அனுமானங்களினால் வேத வசனத்தைத் திரித்துக் கூறுதல் பற்றி எச்சரிக்கை யாக இருக்க வேண்டும் (2 பேது. 3:16). "காணமாட்டார்கள் என்பவர் களைப்போல் அதிகம் பார்வையற்ற தன்மை உடையவர்கள் வேறு எவரும் இல்லை" என்று யாரோ ஒருவர் கூறினார்.

## முடிவுரை

பார்வையைப் பெற்றுக்கொண்ட இந்த மனிதருக்கு நடந்தது என்ன என்பது பற்றி நமக்கு ஒன்றும் கூறப்படுவதில்லை. ஜெப ஆலயத்திற்குப் புறம்பாக்கப்பட்டதின் விளைவுகளை ஆழ்ந்து சிந்திக்கும்போது, இவரது பிந்திய வாழ்வானது அவ்வளவு சுலபமானதாக இருந்திருக்காது - ஆனால் தாக்குதலின் கீழ் இவரது விடாப்பிடியான தன்மையை நினைத்துப் பார்க்கும்போது, இவர் கிறிஸ்துவுக்குத் தம்மை அர்ப்பணித்த ஒரு சீஷராகவே எப்போதும் நிலைத்திருந்திருப்பார் என்பதே எனது யூகமாக உள்ளது.

இருப்பினும், இவ்வரலாறானது, "உலகத்தின் ஒளியாகிய" இயேசுவைப் புறக்கணித்தலின் துன்பகரமான விளைவுகளைப் போதிப்பதற்குக் கூறப்பட்ட அளவை விட அதிகமாக, பார்வையற்ற மனிதர் கனப்படுத்துதல் என்பதற்குக் கூறப்படவில்லை. நாம் ஆவிக்குரிய வகையில் பார்வை யற்றவர்களாய் இருந்து, அதை உணர்ந்தறியாமல் கூட இருக்க முடியும் என்பது வலிவார்ந்த இன்னொரு பாடமாக உள்ளது. யோவான் 9ம் அத்தியாயம், சுயபரிசோதனையின் அவசியத்தை உரத்த சப்தமாய்க் கூறும் ஒரு அத்தியாயம் ஆகும் (2 கொரி. 13:5ஐக் காணவும்).

நீங்கள் இன்னும் "வெளிச்சத்தினிடத்திற்கு" வராதிருந்தால், இன்றே வரும்படி உங்களை நான் உற்சாகமூட்ட அனுமதியுங்கள்.[45] நீங்கள் பார்வையற்றவராக இருந்து, உடல்ரீதியான பார்வை உங்களுக்கு மீண்டும்

கிடைத்தது என்றால் அது எவ்வளவு மெய்சிலிர்ப்புக்கு உரியதாயிருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். ஆவிக்குரிய பார்வையைப் பெற்றுக் கொள்ளுதல் என்பது அதை விட அதிகம் உணர்வெழுச்சியுடையதாக இருக்கிறது!

ஜேக் கூப்பர் என்ற பெயர்கொண்ட ஒரு கண்மருத்துவர் தாம் செய்த கண் அறுவைச் சிகிச்சைகளுக்காகப் புகழ்பெற்றவராக இருக்கின்றார். அறுவைச் சிகிச்சை முடிந்தபின்பு அவர் தமது நோயாளியின் கண்களில் உள்ள கட்டினை ஒரு இருட்டறையில் வைத்து அவிழ்த்தெடுப்பார். நோயாளியின் கண்கள் பழகுவதற்கு நேரம் எடுத்துக் கொண்டபின்பு, ஜன்னல் திரையை நீக்கி விடுவார். அந்த வேளையில், அந்த நபர் [நோயாளி] பெரும்பாலும், "நான் வெளிச்சத்தைப் பார்க்கின்றேன்!" என்று வியப்புடன் கூறுவார், "இன்னும் இல்லை, நீங்கள் பார்க்கவில்லை" என்று மருத்துவர் கூறுவார். அவர் நோயாளியை, ஒரு கண்பரிசோதனை அட்டவணையை வாசிக்கும்படி செய்வதற்குத் தமது அலுவலகத்திற்கு அழைத்துச் செல்வார். அது யோவான் 3:16ம் வசனத்தை இணைத்துள்ள, வழக்கத்திற்கு மாறான கண்பரிசோதனை அட்டவணையாக இருக்கும். நோயாளி, "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" என்று வாசிப்பார்.[46] பின்பு, மருத்துவர் கூப்பர், "இப்போது நீங்கள் வெளிச்சத்தைப் பார்க்கின்றீர்கள்" என்று கூறுவார்.[47]

*நீங்கள் வெளிச்சத்தைப் பார்த்திருக்கின்றீர்களா?* "Amazing Grace" ("மா வல்ல கிருபை") என்ற பாடலின் ஒரு வரியானது, "I once was lost but now I'm found, *was blind, but now I see*" (ஒரு காலத்தில் நான் இழந்து போகப்பட்டிருந்தேன், ஆனால் இப்போது நான் கண்டுபிடிக்கப்பட்டேன், பார்வையற்றவனாய் இருந்தேன், ஆனால் இப்போது நான் காண்கிறேன்) என்று கூறுகிறது.[48] நீங்கள் கர்த்தரை நேசித்து அவருக்குக் கீழ்ப்படிந்தால், நீங்களும் கூட உங்கள் பார்வையைப் பெறமுடியும்!

---

குறிப்புகள்

[1]இயேசு தமது விரோதிகளிடமிருந்து தப்பியோடியிருக்கலாம் அல்லது "கடந்து சென்றிருக்கலாம்." [2]அன்று தவறான இந்தக் கருத்து பலரால் பற்றிக்கொள்ளப்பட்டிருந்தது, இன்றும் பலரால் பற்றிக்கொள்ளப்பட்டுள்ளது. யோபுவின் நண்பர்கள், அவர் மாபெரும் பிரச்சனைகளைக் கொண்டிருந்தபடியால், அவர் ஒரு பெரும்பாவியாக இருக்க வேண்டும் என்று யூகித்துக் கொண்டார்கள். அவர்கள் தவறானவர்களாய் இருந்தனர். பவுலைப் பற்றி மெலித்தாத் தீவுவாசிகள், இதே போன்ற தவறான யூகம் ஒன்றைக் கொண்டிருந்தார்கள் (அப். 28:4). யாத். 34:7 வசனப்பகுதியானது "ஆதார வசனமாக" ரபீக்களால் பயன்படுத்தப்பட்டது. இருப்பினும் அந்த வசனப் பகுதியானது தனிப்பட்ட குற்றத்தையல்ல, ஆனால் கூட்ட அளவிலான விளைவுகளையே குறிப்பிட்டது. இஸ்ரவேலர்கள் கர்த்தரை விட்டுப் பிரிந்ததின் விளைவாக அவர்களுக்கு அடிமைத்தனம் வந்தது என்பது

இதற்கு ஒரு உதாரணமாக உள்ளது: அவர்களின் பாவத்தினிமித்தமாக, அவர்களின் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் அடிமைத்தனத்தில் பிறந்தார்கள். [3]“ரபீ” என்பது ஒரு கனப்படுத்தும் பட்டப் பெயராக இருந்தது, இது “போதகர்” என்ற அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டது. இயேசு ஒரு ரபீயாவதற்குப் பயிற்சி பெற்றவரல்ல மற்றும் அவர் மத அதிகாரிகளால் அப்படிப்பட்டவராக அங்கீகரிக்கப் பட்டிருந்தது இல்லை. [4]நீங்கள் நம்பினாலும் நம்பாவிட்டாலும், ஒரு தனிநபர், தாம் பிறப்பதற்கு முன்பே - கருப்பையிலோ அல்லது முந்திய சில பிறப்புக்களிலோ - பாவம் செய்திருக்கக்கூடும் என்று சில ரபீக்கள் போதித்தார்கள். இப்படிப்பட்ட கோட்பாடுகள் பழைய மற்றும் புதிய ஏற்பாட்டுப் போதனைக்கு நேரெதிராகச் செல்லுகின்றன. [5]மதுபானம் மற்றும் குறிப்பிட்ட சில போதைப் பொருட்களைப் பயன்படுத்துதலும், புகைபிடித்தல் மற்றும் பால்வினை நோய்கள் ஆகியவையும் கூட பிறக்காத [அதாவது கர்ப்பத்தில் உள்ள] குழந்தையைப் பாதிக்கக்கூடும். [6]இந்த மனிதரும் இவரது பெற்றோர்களும் ஒருக்காலும் பாவம் செய்யாதிருந்தார்கள் என்று இயேசு கூறவில்லை (ரோமர் 3:23). இந்த மனிதரின் *பார்வையற்ற தன்மை* இவரின் அல்லது இவரது பெற்றோரின் பாவங்களினால் விளைந்ததல்ல என்று மட்டுமே அவர் [இயேசு] கூறினார். [7]பொதுவான ஒரு கருத்தில், எல்லாத் துன்புறுதல்களுமே ஆதாம் மற்றும் ஏவாள் ஆகியோரின் பாவத்தின் விளைவாகவே உள்ளன (ஆதி. 3:3, 17-19). மற்றும், சில பாவங்களுக்கு உடனடியான விளைவுகளும் இருக்கின்றன (நீதி. 13:15ஐக் காணவும்). இருந்தபோதிலும், எல்லாத் துன்புறுதல்களுமே *தனிப்பட்ட* பாவத்தின் விளைவாக இருப்பதில்லை. யோபுவின் துன்புறுதல் தனிப்பட்ட பாவத்தின் விளைவாக இருந்ததில்லை. வளமை மற்றும் நீதி அல்லது துன்புறுதல் மற்றும் பாவம் ஆகியவற்றிற்கு இடையில் பெரும்பாலும் தொடர்பு இருப்பதே இல்லை என்று சங். 73 போதிக்கிறது. மற்றவர்களைக் காட்டிலும் அதிகம் துன்மார்க்கராய் இராத சிலர் பேரழிவினால் துன்புற்றதைப் பற்றி இயேசு பேசினார் (லூக். 13:2-5). [8]இன்னல்மிக்க சூழ்நிலை பற்றி இங்கு சில வசனப்பகுதிகள் உள்ளன: சங். 119:71; 2 கொரி. 12:9; எபி. 12:7-13; யாக். 1:2, 3; வெளி. 7:14. [9]வாழ்வு என்பது சுருக்கமானது (சங். 90:5, 16; யாக். 4:14; 2 பேது. 3:8). தேவனுடைய ஊழியத்திற்கு எப்போதுமே ஒரு அவசரத் தன்மை உள்ளது (பிர. 4:15; எபே. 5:16). [10]இது, குணமாக்குதல் தொடர்பாக இயேசு எச்சிலைப் பயன்படுத்திய மூன்றாவது முறையாக உள்ளது (மாற். 7:33; 8:22-26ஐக் காணவும்). இருப்பினும், அவர் மக்களைக் குணமாக்குவதற்கு ஒரே விதமான எந்த வழிமுறையையும் பயன்படுத்தவில்லை. எடுத்துக்காட்டாக, பார்வையற்றவரைக் குணப்படுத்துவதில் அவர் ஒருமுறை பார்வையற்ற மனிதரின் கண்களைத் தொட்டார் (எச்சிலும் சேறும் இல்லை) (மத். 9:27-31). ஒருமுறை அவர் எச்சிலை மட்டும் பயன்படுத்தினார் (சேறு இல்லை) (மாற். 8:22-26), மற்றும் ஒருமுறை (இவ்வேளையில்) அவர் எச்சிலையும் சேறையும் பயன்படுத்தினார். கிறிஸ்து, தமது வல்லமை என்பது தமது முறைமைகளில் அல்ல, ஆனால் தமது நபர்த்துவத்தில்தான் உள்ளது என்பதை வலியுறுத்துவதற்காகத் தமது செயல்முறைகளை மாற்றியிருந்திருக்கலாம்.

[11]“இயேசு இந்த மனிதரைக் குளத்தில் சென்று கழுவும்படி கூறியது ஏன்?” என்று இன்னொரு கேள்வியைக் கேட்க முடியும். இதற்குப் பதிலை நாம் அறிவதில்லை. இருப்பினும், வேதாகமம் எழுதப்பட்ட காலத்தில், மனிதர்கள் ஆசீர்வதிக்கப் படுவதற்கு எதையாகிலும் *செய்யும்படிக்குத்* தேவன் கேட்டுக்கொள்ளுதல் என்பது வழக்கமானதாக இருந்தது. [12]சீலோவாம் குளம் பற்றிய தகவலுக்கு இந்தப் புத்தகத்தில் உள்ள துணைப் பாடத்தைக் காணவும். [13]இந்தப் புத்தகத்தில் உள்ள எருசலேமின் வரைபடத்தைக் காணவும். [14]இயேசு இந்தப் பார்வையற்ற மனிதரை பெண்கள் முற்றத்தில் இருந்த பிரதான வாயிலின் அருகில் எதிர்கொண்டு

இருந்திருக்கலாம். கிறிஸ்து அந்தப் பகுதியில் இருக்கையில் பெரும்பாலும் தங்கும் இடமான பெத்தானிக்குச் செல்லும் சாலையில் இவரைச் சந்தித்திருக்கலாம் என்பது இன்னொரு சாத்தியக்கூறாகும் (மத். 21:17; மாற். 11:11; யோவா. 11:18க் காணவும்). எவ்வகையிலும், அந்தக் குளமானது சற்றுத் தொலைவாகவே இருந்திருக்க வேண்டும். [15][ஆங்கிலத்தில் மற்றும் தமிழில்] நாம் இவ்விடத்தில் நான்கு வார்த்தைகளைக் கொண்டுள்ளோம், ஆனால் கிரேக்க மொழியில் இவ்விடத்தில் மூன்றே மூன்று வார்த்தைகளே உள்ளன. [16]பொதுவாக விசாரணையை நடத்தியவர்கள் பரிசேயர்கள் என்று அழைக்கப்பட்டார்கள் (வ. 13, 15, 16, 40). இருப்பினும், அவர்கள் ''யூதர்கள்'' என்று இருமுறை அடையாளப் படுத்தப்பட்டார்கள் (வ. 18, 22), இது எருசலேமில் இருந்த மதரீதியான அதிகாரிகளுக்கான அதிகம் பொதுவான சொற்றொடராக இருந்தது. அயலகத்தவர் கள் இம்மனிதரை, சனதெரீன் சங்கம் கூடிவந்த ஆலோசனைக் கூட்ட அறைக்கு அழைத்துச் சென்றிருக்கலாம் (KJVயில் காணவும்). [17]“இந்த மனுஷன்” என்பது ஒரு மதிப்புக் குறைவான சொற்றொடராக உள்ளது. [18]சேறுண்டாக்குவதை அவர்கள் மாவு பிசைதலுடன் சமமாக்கினார்கள்; அது “வேலை” என்று கருதப்பட்டது. புண்ணின்மீது எச்சிலைத் தடவுவதையும் பாரம்பரியங்கள் தடை செய்தன. [19]முக்கூற்றியல் என்பது தர்க்கவியல் என்ற களத்தில் பயன்படுத்தப்படுகிற வாதம் ஒன்றின் வகையாகும். [20]இந்த நிகழ்ச்சியானது யூதத்துவத் தலைவர்கள் மற்றும் இதைப் பற்றி அறிந்திருந்தவர்கள் ஆகியோரின் சிந்தைகளில் ஒரு பிரதான செயல்தாக்கம் கொண்டிருந்தது (யோவா. 11:36, 37ஐக் காணவும்).

[21]இந்தப் புத்தகத்தில் உள்ள “பதிலுக்கானது எதையும், ஏற்றுக்கொள்ளாதீர்கள்” என்ற பாடத்திலுள்ள விளக்கவுரைகளைக் காணவும். [22]இந்தக் கூற்றை யோவான் 4:19ல் உள்ள கூற்றுடன் ஒப்பிட்டுக் காணவும். [23]தீர்க்கதரிசிகளாயிருந்த எலியாவும் எலிசாவும் அற்புதங்களைச் செய்திருந்தார்கள் (1 இரா. 18; 2 இரா. 2:19-22; 4:18-44; 5:1-14). [24]உலகில் நான் வாழும் பகுதியில், நாங்கள் “இவர் ஒரு ஏமாற்று வேலை செய்ததாக அவர்கள் நினைத்தார்கள்'' அல்லது ''இவர் அவர்களை ஏமாற்ற முயற்சிக்கின்றார்'' என்று கூறுவதுண்டு. [25]''இவன்'' என்ற வார்த்தையானது இம்மனிதர் அங்கு அல்லது அருகில் இருந்தார் என்பதை மறைமுகமாய் உணர்த்துகிறது. இவர் அநேகமாக அந்தச் செயல்முறை நடந்த நேரம் முழுவதிலும் அங்கு தங்கியிருக்க வேண்டியிருந்து இருக்கும், இது ஏராளமான நேரத்தை எடுத்துக் கொண்டிருக்கும் (பெற்றோரை அழைப்பித்தல், அவர்கள் வருகைக்காகக் காத்திருத்தல் இன்னும் பிற). இவர் தமது பெற்றோரின் பதில்களைக் கேட்டிருக்க வாய்ப்புண்டு. [26]ஜெப ஆலயத்துக்குப் புறம்பாக்குதல் பற்றி யோவா. 12:42 மற்றும் 16:2 ஆகிய வசனங்களைக் காணவும். [27]யூதமக்களிலிருந்து அறுப்புண்டு போகுதல் (விலக்கி வைக்கப்படுதல்) என்பது பற்றி, எண். 15:30 மற்றும் லூக். 6:22 ஆகிய வசனங்களைக் காணவும். [28]''வயதுள்ளவன்'' என்பது இம்மனிதர் பதிமூன்று வயதுக்கு மேற்பட்டிருந்தார் என்று மட்டும் குறிப்பதாகச் சிலர் நினைக்கின்றார்கள். பெரும்பாலும் இது, இவர் முப்பது வயதிற்கு மேற்பட்டவராக இருந்தார் என்றே அர்த்தப்படுகிறது; முப்பது வயது என்பது இந்த வேளையில் பக்குவமான இயல்பை அடையக் கூடிய வயதாகக் கருதப்பட்டது. [29]உங்களுக்“கும்” என்ற வார்த்தை, இவர் இவ்வேளையில் தம்மை ஒரு சீஷராகக் கருதினார் என்று சுட்டிக் காண்பிப்பதாகக் காணப்படுகிறது. [30]கிரேக்க மொழியில், கேள்விகளின் கட்டமைப்பானது, எதிர்மறையான அல்லது நேர்மறையான பதில்களில் எது எதிர்பார்க்கப்படுகிறது என்பதைப் பெரும்பாலும் சுட்டிக்காண்பித்தது. இதைச் சுட்டிக் காண்பிக்க NASB முயற்சித்துள்ளது. KJVயுடன் ஒப்பிடவும்.

[31]யோவா. 9:31ஐ நீங்கள் எவ்வாறு பயன்படுத்துகின்றீர்கள் என்பது பற்றி

*எச்சரிக்கையாயிருங்கள்.* [32]*பார்வையற்றவர்களைக் குணமாக்குதல் என்பது மேசியாவின் ஊழியத்தின் தனிச்சிறப்பான அம்சமாக இருந்தது (ஏசா. 29:18; 35:5; 42:7; மத். 11:2-6ஐக் காணவும்). பார்வையற்றவர்களுக்குப் பார்வையை மீட்டுத் தருதல் என்பது இயேசு செய்த வேறு எந்த அற்புதத்தைக் காட்டிலும் அதிகமாக அறிவிக்கப்பட்டுள்ளது (மத். 9:27-31; 12:22; 20:29-34).* [33]"Congenital" *என்பது "பிறப்பிலிருந்தே இருப்பது ஆனால் வம்சவழியினால் உண்டானது அல்ல" என்று அர்த்தப்படுகிறது* (*American Heritage Dictionary,* 4th ed. [2001]). [34]*இயேசுவின் ஜெபத்தைத் தேவன் கேட்டார் என்பதற்கு குணமாக்கப்பட்ட மனிதர், உயிருள்ள நிரூபணமாக இருந்தார்; இம்மனிதரின் பார்வையற்ற தன்மை குணமாக்கப்பட வேண்டும் என்ற இயேசுவின் ஜெபத்தைத் தேவன் கேட்டிருந்தார்.* [35]*விஷயம் இதுவல்ல என்று இயேசு ஏற்கனவே சுட்டிக்காண்பித்திருந்தார் (யோவா. 9:3). பிள்ளைகள் பரிசுத்தமானவர்களாகப் பிறப்பதாகப் புதிய ஏற்பாடு போதிக்கிறது (மத். 18:3; 19:14). கால்வினீய விளக்கவுரையாளர்களின் உபதேச நிலைப்பாடுகள் அவர்களைப் பரிசேயர்களின் தவறான வார்த்தைகளுடன் ஏதோ ஒரு வகையில் ஒத்துப் போகும்படி வற்புறுத்துகிறபோது, அது இவர்களுக்குச் சங்கடமுள்ளதாயிருக்கும்.* [6]*''புறம்பே தள்ளிவிடுதல்'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது மதத்திலிருந்து விலக்கி வைத்தலைக் குறிப்பிடுவதற்கு பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பில் (செப்துவஜிந்த்து) பயன்படுத்தப்பட்டது. யோவா. 9:35 வசனம், இந்தப் பிச்சைக்காரர் "புறம்பாக்கப்பட்டிருந்தது" பற்றிய வார்த்தை பரவியிருந்ததைச் சுட்டிக் காண்பிக்கிறது. இவர் வெறுமனே வெளித் தள்ளப்பட்டிருந்தார் என்பதை விட, மதத்திலிருந்து விலக்கி வைக்கப்பட்டிருந்தார் என்றிருந்தாலே வார்த்தையானது அவ்வளவு விரைவில் பரவக்கூடிய சாத்தியக்கூறு உள்ளது.* [37]*உலகில் நான் வாழும் பகுதியில், நாங்கள் "அவர் ஒரு நாளின் சக்கரம் கட்டிய நிலையைக் கொண்டிருந்தார்" என்று கூறுவதுண்டு.* [38]*இவரது அயலகத்தார்களும் பெற்றோர்களும் இவர் பக்கமாய் நின்றிருக்கவில்லையே.* [39]*இவ்விடத்தில்* KJV*யில் "தேவகுமாரன்" என்றுள்ளது, ஆனால் "மனுஷ குமாரன்" என்பதே மிகச் சிறந்த கையெழுத்துப் பிரதிகளின் ஆதாரத்தைக் கொண்டுள்ளது. இயேசுவால் பயன்படுத்தப்பட்டபடி, இவ்விரு சொற்றொடர்களுமே மேசியாத்துவச் சொற்றொடர்களாக உள்ளன ("மனுஷ குமாரன்" என்பது பற்றி தானி. 7:13ஐக் காணவும்).* [40]*கிரேக்க மொழியில் வலியுறுத்தமானது பல வழிகளில் சுட்டிக்காண்பிக்கப்பட்டது. இந்த இடத்தில், இது "நீ" என்ற வார்த்தையை (முதலில், வினைச் சொல்லின் ஒரு பகுதியாகவும் பின்பு தனிப்பட்ட ஒரு வார்த்தையாகவும்) மீண்டும் பயன்படுத்துதலினால் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ளது. இவ்வகையான வார்த்தைக் கட்டமைப்பு இந்த அத்தியாயத்தில் பலமுறை காணப்படுகிறது.*

[41]*இயேசு யார் என்பதை இம்மனிதர் இன்னமும் அறியாதிருந்தபடியால், இந்த வேளையில் ''ஆண்டவர்'' என்ற வார்த்தையானது அவரது தெய்வீகத்துவத்தை ஒப்புக்கொள்ளுதல் என்ற வகையிலின்றி, மரியாதைக்குரிய ஒரு பதமாக ("ஐயா" என்பது போல்;* RSV*யில் காணவும்) பயன்படுத்தப்பட்டது. அந்த ஒப்புக் கொள்ளுதல் வசனம் 38ல் வருகிறது.* [42]William Barclay, *The Gospel of John,* rev. ed., vol. 2, The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 52. [43]*பணிந்துகொள்ளுதலை இயேசு அனுமதித்தார் என்ற உண்மையானது அவர் தமது தெய்வீகத்துவத்தை மறுக்கவில்லை என்பதற்கு நிரூபணமாக உள்ளது (மத். 4:10ஐக் காணவும்).* [44]*அவர் பரலோகத்திலேயே தங்கியிருந்து, நமது நியாயாதிபதியாக இருந்திருக்க முடியும், ஆனால் அவர் நமது இரட்சகராக இருப்பதற்காக, இந்த உலகத்திற்கு வரவேண்டியதாயிற்று.* [45]*கர்த்தருக்கு எவ்வாறு பதில்செயல் செய்வது*

*என்று நீங்கள் உங்கள் உரையைக் கேட்பவர்களுக்குக் கூற விரும்பலாம். மனம்வருந்தும் ஒரு விசுவாசி ஞானஸ்நானம் பெறவேண்டும் (மாற். 16:16; அப். 2:38), தவறு செய்யும் கிறிஸ்தவர் மனந்திரும்பி மீண்டும் கட்டுவிக்கப்படுவதற்காக ஜெபிக்க வேண்டும் (அப். 8:22; யாக். 5:16).* [46]*யோவான் 3:16ன் வசனங்களைக் கொண்ட பெரிய வரைவட்டவணை ஒன்றை நீங்கள் ஏற்படுத்த முடியும்.* [47]This illustration is from Rick Atchley, "A Pilgrim's Progress," sermon preached at the Southern Hills church of Christ, Abilene, Texas, 14 November 1982. [48]John Newton, "Amazing Grace," *Songs of Faith and Praise,* comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994). (Emphasis mine.)